தினமணி

4/12

# ‘விளையாட்டு காயங்களுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் தேவை அதிகரிப்பு’




விளையாட்டு மருத்துவம் நூல் வெளியீட்டு விழாவில் (இடமிருந்து) ஸ்ரீபாலாஜி மருத்துவக்கல்லூரி துணை முதல்வர் ஜெ.தங்கா பால்,கல்வி ஆலோசகர் ஆர்.வீரபாகு,முதல்வர் ஜான்சன்,தமிழ்நாடு விளையாட்டுப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் ஏ.எம்.மூர்த்தி,ஆராய்ச்சித்துறை இயக்குநர் பி.ராமசாமி.

**தாம்பரம், ஏப். 20:** விளையாட்டின்போது ஏற்படும் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களின் தேவையானது இந்தியாவில் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது என்று தமிழ்நாடு உடற்கல்வி- விளையாட்டுப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ஏ.எம்.மூர்த்தி கூறினார்.

குரோம்பேட்டை ஸ்ரீபாலாஜி மருத்துவக் கல்லூரியில் செவ்வாய்கிழமை நடைபெற்ற விழாவில், முன்னாள் துணை வேந்தர் ஏ.எம்.மூர்த்தி, கல்லூரியின் ஆராய்ச்சித் துறை இயக்குநர் பி.இராமசாமி ஆகியோர் எழுதிய விளையாட்டு மருத்துவம் என்ற ஆங்கில நூல் வெளியிடப்பட்டது.

இதன் முதல் பிரதியை கல்வி ஆலோசகர் டாக்டர் ஆர்.வீரபாகு வெளியிட, கல்லூரி முதல்வர் ஜான்சன் பெற்றுக் கொண்டார். பின்னர் முன்னாள் துணை வேந்தர் ஏ.எம்.மூர்த்தி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

பெரும்பாலான விளையாட்டு வீரர்கள் தசைநார், எலும்பு, நரம்புமண்டல காயங்கள் மற்றும் பாதிப்பு தொடர்பான பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர்.

அவர்களுக்கு உடல் ரீதியாக மட்டுமல்லாமல் மனரீதியாகவும் சிகிச்சை, பயிற்சி அளிக்க வகை செய்யப்படுகிறது.

மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் வரும் யோகா படிப்பின் முக்கிய அங்கமான மூச்சுப்பயிற்சி, ஆசனம், தியானம் ஆகியன விளையாட்டு மருத்துவப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு இருக்கிறது. மேலும், விளையாட்டின்போது ஏற்படும் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களின் தேவை அதிகரித்து இருக்கிறது என்றார்.

ஸ்ரீபாலாஜி மருத்துவக்கல்லூரி இயக்குநர் டாக்டர் குணசேகரன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.